செய்தி வெளியீடு எண். 124 நாள்.28.02.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கும் இ-சேவை மையங்களில் வாக்காளர் அடையாள அட்டையினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் 01.01.2017-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கணக்கில்கொண்டு, 05.01.2017 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றில் புதிதாக பெயர் சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கான வாக்காளர் அடையாள அட்டையினை திருவள்ளூர் மாவட்டத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கும் இ-சேவை மையங்களிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கென தேர்தல் ஆணையத்தால் அவரவர்களது கைபேசி எண்ணிற்கு ஒரு இரகசிய எண் (OTP) அனுப்பப்பட்டுள்ளது. அதனை இ-சேவை மையத்தில் காண்பித்து அவரவர்களுக்கான வாக்காளர் அடையாள அட்டையினை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இரகசிய எண் அழிக்கப்பட்டிருந்தால் வாக்காளர் அடையாள எண்ணை குறிப்பிட்டு தங்களது புகைப்படம் உள்ள ஏதேனும் ஒரு அடையாள அட்டையினை காண்பிக்கும் பட்சத்திலும் இலவசமாக வாக்காளர் அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வாக்காளர்கள், தங்களது வாக்காளர் அடையாள அட்டையானது காணாமல் போனாலோ அல்லது இதுவரை பெற்றுக்கொள்ளாமல் இருந்தாலோ வாக்காளர் பட்டியலில் தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள அடையாள எண்ணை ஏதேனும் ஒரு இ-சேவை மையத்தில் காண்பித்து, கட்டணமாக ரூ.25/-ஐ செலுத்தும்பட்சத்தில் புதிய வாக்காளர் அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ளலாம். இந்த சேவையை வாக்காளர்கள் செம்மையாக பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் வாக்காளர் தொடர்பாக வேறு ஏதேனும் விவரம் அறிய வேண்டுமெனில் கட்டணமில்லா தொலைபேசி எண் 1950-ஐ தொடர்புகொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாமென திருவள்;ர் மாவட்ட தேர்தல் அலுவலா் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~